பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றுண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 குருகுலம், மாம்பாக்கம்; நந்தன, ஆனி; 4—7—52. தளிர்—40

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## உண்மை யின்பம்

உலகத்தில் இன்பநுகர்ச்சி எத்துணையோ வகைகளாற் போற்றப் படுகின்றது. எண்ண எண்ண வற்றாத உணர்ச்சிப் பெருக்காகி உள்ளத்தில் என்றும் ஒரு படித்தாக நிலைத்து வாழும் இன்பமும், முகிற் கூட்டத்தில் சடுதியில் தோன்றி மறையும் மின்னலைப் போன்று திடுமெனத் தோன்றி மாய்ந்தொழியும் இன்பமும் என அவ் வின்பங்களை இரு கூற்றில் அடக்கலாம்.

கற்பிற் சிறந்த இல்லாளோடு தலைமகன் இல்லற நெறியில் வாழ்வாங்கு வாழ்ந்து அடையும் இன்பம் வற்றாத நறுநீர் ஊற்றைப் போன்றது. அறவோர்க் களித்தல் முதலான நல்லறங்களைக் கடமை வழுவாமற் காதன் மனையாளுங் காதலனுமாகக் களிப்புடன் காத்தோம்பி இன்பக் கூட்டத்தில் ஈருடலும் ஒருயிருமாகத் திகழும் இன்பத்துக்கு உவமை கூற யாரால் முடியும்?

வாழ்நாண் முதிர முதிரக் காதலன்பும் கடமையும் அதற் கேற்ப முதிர்ந்து வாழு நாளெல்லாம் நல்லன புரிய இடமளிக்கும் இல்லறத்திற் காணும் இன்பமே புகழோடு கூடிய உண்மையின்பமாகும். மற்றவை காட்டாற்றின் இயல்பின. கூடா வொழுக்க முதலிய வற்றாலும் ஏனைய தீநெறிகளாலும் அடையும் இன்பம் நுகருங்கால் இமயத்தின் அளவாகக் காணினும், இமைக்கு முன் மாய்ந்தொழிந்து அணுவினும் கீழாதல் ஒரு தலை. மற்றும் அரிதில் அடைந்த புகழினைச் சடுதியில் விழுங்கித் துன்பமும் தாழ்வும் அடையச் செய்யும். எனவே, அவ் வின்பங்கள் அறிஞராற் பொய்யென்று கருதிப் புறத் தொதுக்கப்பட்டனவாகும்.

---

அறத்தான் வருவதே
இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

அறத்தான் வருவதே இன்பம் – இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; மற்ற எல்லாம் புறத்த – அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினும் துன்பத்தினிடத்த; புகழும் இல – அதுவேயும் அன்றிப் புகழும் உடையவல்ல.

ஆன் உருபு ஈண்டு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. 'தூங்குகையான் ஓங்கு நடைய' என்னும் இடத்தில் வந்ததைப் போல 'இன்பத்தின் புறம்' எனவே துன்பம் ஆயிற்று. பாவத்தால் வரும் பிறனில் விழைவு முதலாயின அக்கணத்துள் இன்பமாகத் தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலின் 'புறத்த' என்றார். அறத்தோடு வாராதன புகழும் இல எனவே, வருவது புகழும் உடைத்தென்பது பெற்றாம். இதனால் அறம் செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவர் என்பது கூறப்பட்டது.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

| | | | |
|---|---|---|---|
| உள் நாடு | ரூ. 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. 6 | 0 | 0 |
| தனித் தாள் | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ. 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.
முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | நந்தன, ஆனி, | தளிர் |
|---|---|---|
| 4 | 4-7-52 வெள்ளி | 40 |


# தொண்ட நாட்டு - - யாத்திரை

நம் இந்திய நாட்டில் அருட் சக்தி பதிந்த இடங்கள் எண்ணிறந்தன உண்டு. அவற்றில் பெரும்பாலன நம் செந்தமிழ் நாட்டிலேயே இருக்கின்றன என அறியும் போது தமிழர் உள்ளம் பெருமிதங் கொள்ளும். அருளியல் வாழ்கையில் ஈடு பட்டவர்களை அப்படிப்பட்ட இடங்கள் ஈர்த்திருக்கின்றன. அவ்வாறு ஈர்க்கப்பட்டவர்கள், தாம் பெற்ற பேற்றினைப் பிறரும் அடையும் வண்ணமும் ஆராக் காதலால் இறைவனை எத்தும் வகையிலும் தம் அருள் வாக்கினால் அங்கங்கும் பாடல்கள் பாடிச் சென்றிருக்கின்றனர்.

அவர்களுள் நால்வர் முக்கியமானவர். அவர்கள் சென்று பாடிய பதிகளைத்தான் பாடல் பெற்ற பதிகள் என மக்கள் இன்றளவும் போற்றி வருகின்றனர் அவர்கள் இன்னின்ன பதிகளுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது அவர்கள் பாடல்களால் தெரிகிறது.

தொண்டை நாடென்னும் நம் தமிழ் நாட்டு வடபகுதியில் பாடல் பெற்றனவாக உள்ள பதிகள் முப்பத்திரண்டு உள்ளன.

பிற பதிகளைவிடப் பாடல் பெற்ற பதிகள் சிறந்தவை. காரணம், அவர்கள் சென்று வழிபட்டமையாலும், அவ்வாறு வழிபட்டதிலிருந்து அருள் சக்தி ஆங்காங்கும் பதிந்து விளங்குகின்றன வாதலாலும். ஆகவே, நாம் அப் பதிகளுக்குச் சென்று வழிபட்டால் அவ்வப் பதிகளின் அருட் சக்திகளைப் பெற்று வரலாமன்றோ? மேலும், யாத்திரையாகப் பல இடங்களுக்கும் செல்கையில் அங்கங்கும் வாழும் மக்கள் நிலையெப்படி யிருக்கிறது, எவ்வெத் துறையில் அவர்கள் உயரவேண்டும், அதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்ற குறிப்புகளைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப் புண்டு.

இக் காரணங்களால் நம் குருகுல ஆசிரியர் அவர்கள் யாத்திரைக்குச் செல்லவேண்டுமென்று தொடங்கி முதன் முதலாகத் தாம் இருக்கும் தொண்டை நாட்டு யாத்திரையை மேற்கொண்டனர். அவர்களோடு அன்பர் பலர் சென்றனர். யாத்திரையைப் பற்றி விரிவான ஒருநூலே வரவேண்டு மாகையால் ஈண்டு விரிக்கவில்லை.

ஆசிரியர் நம் நெறி நால்வர் நெறியென்றும், அதனைப் பின்பற்றினால் நாமும் உய்யலாம் நாடும் உய்யும் என்றும் பல முறை சொல்லி யிருக்கின்றனர். நால்வர்கள் எந்தக் காரியத்தையுந் தொடங்குவதற்கு முன் இக் காரியத்தில் ஈடுபட்டால் எவ்வளவு இடர்ப்பாடு உண்டோ என்று எண்ணியும், அதற்கு என்னென்ன வசதிகள் கிடைக்குமென்று முன் கூட்டி ஆராய்ந்தும் முற்பட்டதாகத் தெரியவில்லை. அருள் ஒன்றே குறியாகக் கொண்டு தமக்கு நல்லன வென்று தோன்றியவைகளைச் சூழல் வசதிகள் கவனியாது செய்து வந்தனர். இறைவன் அவர்களுக்கு இடர்ப்பாடு உண்டான காலத்தல் தாமே நீக்கியருளியிருக்கின்றார்.

அவர்கள் யாத்திரை சென்ற காலத்தில் இக் காலத்தை விடப் பலவகையில் வசதிகள் குறைவு. புகை வண்டிகள் கிடையா; தந்தி தபால்கள் கிடையா; இதழ்கள் கிடையா; அப்படி யிருந்தும், அவர்கள் தமிழ்நாடு முழுதும் சுற்றிப் பேருணர்ச்சியைப் பல்லாயிரக் கணக்கான மக்களிடையே பெருக்கி வந்திருக்கின்றனர்.

அவர்கள் நெறியைப் பின்பற்றியே ஆசிரியர் அவர்களும் இந்த யாத்திரையை மேற்கொண்டனர். வசதிகள் இறைவன் அருளால் தாமே கிடைத்தன. யாத்திரை இனிது நிறைவேறியது.

இந்த யாத்திரையில் மலைப் பதிகள், வயல் நிலத்தினூடே யுள்ள பதிகள், முல்லை நிலத்தினுள்ள பதிகள், இப்படி பல

திற நிலங்களிலுமாகப் பதிகள் அமைந்திருந்ததைப் பார்த்தோம்.

காடு கடந்து சென்றோம்; மலைமேல் கற் பாறையினூடே சென்றோம்; பாலை நிலத்தில் நடுப்பகலில நல்ல வெயிலிலும் சென்றோம்; ஊர்தி வசதிகளோடும் சென்றோம்; நடையாகவே நெடுந்தூரம் செல்ல நேர்ந்த போது அப்படியும் சென்றோம்; ஓர் இடத்தில் ஏரியின் நீரில் இரங்கிக் கடந்தோம். இப்படி வசதி உள்ள இடங்களுக்கும் வசதி குறைவான இடங்களுக்கும் சென்றோம்.

இந்த யாத்திரையில இரண்டு பெருங் குறைகள் எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை யளித்தன. நெஞ்சம் உருகிப் புலம்பினேம். சமயப் பேற்றுதல் நம் நாட்டில் மிகவும் இரங்கத் தக்க நிலையிலிருத்தலை எண்ணி நைந்து உருகினேம். திருவெண்பாக்கம் என்று சுந்தரர் பாடல் பெற்ற ஒரு பதி சென்னைக்கு அருகே முப்பது கல் தொலைவில் உள்ளது. அப் பதி யிருக்குமிடத்தில் ஒரு பெரிய நீர்த்தேக்கம் அமைத்து அப்பதி முழுமையையும் நீரில் ஆழ்த்தி விட்டனர். ஒரு சிறந்த பதியைப் போற்ற வழியறியாது நம் உலகியல் வசதிக்காக அழித்து விட்டோம். நால்வர் பெரு மக்கள உலகியலை அருளியல் வாழ்வுக்கு ஏற்ப அமைத்து வாழ்ந்தனர். நாம் நேர் மாறாக உலகியல் வசதிக்காக அருளியற் பதி ஒன்றை அழித்தும் கெட்டு ஒழிகிறோம். அத்திருக் கோவில் நீரில் மூழ்கிப் பல காலம் இருந்தும் இன்னும் முழுமையும் சிதைந்து விடவில்லை. அதனை மறுபடியும் சீர்படுத்திக் காத்தால் முன்னோர்கள் நமக்குத் தந்து சென்ற அருட் சொத்தைக் காப்பாற்றியவர்களாவோம்.

இன்னொரு குறை ஒரு பதியிலிருந்து மற்றொரு பதிக்குச் சரியான வழிகள இல்லாமை. சில இடங்களில் சரியான வழி தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்தோம். பாதையோ மேடும் பள்ளமும் கல்லும் முள்ளும் நிறைந்து இருக்கின்றது. சரியான பாதை இல்லாத காரணத்தாலேயே பல பேசாமல் கவனிப்பாரற்றுக் கோவில்கள் திருத்தமின்றிக் கிடக்கின்றன.

இவற்றைக் கண்ணுற்ற எங்கள் மனம் மிக்க வேதனையடைந்தது. இனியேனும் அங்கங்கே உள்ளவர்கள் சரியான பாட்டைகள் அமைத்து நம் பாடல் பெற்ற பதிகளுக்குச் செல்ல மக்களுக்கு வேண்டும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அது சிறந்த சிவ புண்ணியச் செயல்!

இனி, ஆங்காங்கும் மக்கள் சமயக் கருத்துக்களில் போதுமான தெளிவின்றி யிருக்கின்றனர். அவர்களுக்குச் சமயத் தெளிவினை யூட்டி வர இம் மாதிரி யாத்திரையாகப் பலர் அடிக்கடி சென்று விளக்கி வர வேண்டும்.

இந்த யாத்திரையில் ஒவ்வொரு பதியிலும் கண்டவை, கேட்டவை, தெரிந்தவை முதலியவை பற்றி விரிவான குறிப்புக்களடங்கிய ஒரு நூல் விரைவில் வெளிவா விருக்கின்றது. அந் நூலில் விரிவான விளக்கத்தினையும் ஆசிரியர் ஆங்காங்கும் நிகழ்த்திய விரிவுரைகளின் சுருக்கத்தையுங் காணலாம்.

—முத்துசாமி.


# குருகுல - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.

3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. திருக்கழுக்குன்றப் பதிகம்
விலை அணா 2.

5. கருக் கலை
விலை அணா 4.

6. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9

8. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா 8.

9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.

10. ஆத்திசூடி – கருத்துரை
விலை 0-0-3.

**கிடைக்கும் இடம் :**

குருகுல, மாம்பாக்கம்,

மதுராந்தகம், P. O., (S.I.R.)

# * முதலாளிக்கா? * தொழிலாளிக்கா? *

(முன் தொடர்ச்சி) ‘நலங்கிள்ளி’

மேற் கூறிய முறைகளில் ஒன்றோ பலவோ முதலாளி, கட்டாயம் மேற்கண்ட நிலை எய்தும் காலத்தில் கைக்கொள்ளத் தயங்குவது கிடையாது.

மேலை நாடுகளிலே கப்பல் கப்பலாகக் கோதுமையைக் கடலில் தள்ளுவதும் காபிக்கொட்டையை எரித்து விடுவதும் நம் நாட்டிலேயும் மிதமிஞ்சி உற்பத்தியாய் விட்ட துணிகளை மில்களிலே தேக்கி வைத்துக் கொள்வதும், சில இடங்களிலே மில்களை இழுத்துப் பூட்டி வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் பின்னும் அதிகப்படுத்துவதும் மேற்கூறியவற்றிற்கு எல்லாம் எடுத்துக் காட்டுகள் ஆகும்.

இவை யாவற்றிற்கும் காரணங்களாவன:

(1) முதலாளி முதல் வைக்கக் கூடிய நிலையில் இருந்து தொழிற் சக்தியை விலைக்கு வாங்குவது.

(2) தொழிலாளி தன்னிடம் பொருள் இல்லாமையால் தன்னிடமுள்ள தொழிற் சக்தியையே ஒரு பண்டம்போல் விற்று விடுவது.

(3) முதலாளி தொழில் நேரத்தை நீட்டித்துத் தொழிற் சக்தியை அபகரிப்பதன் மூலம் உபரி மதிப்பை, உபரி உற்பத்தியை எய்தி, பணங் குவித்துக் கொள்வது.

எனவே இந்த முறையை எப்படி நீக்கலாம் என்பதை ஆ[illegible]வோம்.

ஒரு முதலாளி 30, 000 ரூபாவில் ஒரு நூல் ஆலை ஆரம்பிக்கிறான். அவனிடம் 3, 000 தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாம். ஒரு ஆண்டின் முடிவில் தொழிலாளிகள் சம்பளம் கட்டிட வாடகை, அல்லது வரி முதலியன, மின்சாரச் செலவு, முதலாளியின் சொந்தச் செலவு, ஆடம்பரச் செலவு மற்றும் பிற செலவுகள் எல்லாம் போக அந்த நூலாலைக்குச் சுமார் 6, 000 ரூபாய் மீதம் கிடைக்கிறது என்றால், அந்தத் தொகை யாருக்குச் சொந்தம் முதலாளிக்கா? தொழிலாளிக்கா?

இலாபத்திலே முதலாளியின் செலவு முதலியவை போக மீதியுள்ளது ரூ. 6, 000 இந்தப் பணம் தொழிலாளியின் உழைப்பு; அவனின், வேலைநேர நீடிப்பால் உபரி மதிப்பாக்கப் பட்ட நூலை விற்ற பணம். ஆனால் தொழிலாளி அந்தப் பணத்தில் ஒருபைசாவும் எதிர் பார்க்க முடியாது. அது முதலாளியின் சொந்தப்பணம்; முதலாளித்துவ முறைப்படி. நிற்க;

ஒவ்வோர் ஆண்டும் சுமார் 6, 000 வீதம் லாபத்தில் மிகுதி நிற்குமானால், ஐந்து ஆண்டுகட்குப் பிறகு, அந்த முதலாளி, தான் முதல் வைத்த ரூ. 30, 000 ஐயும் எடுத்து விடுகிறான் அந்தத் தொழில் மூலமாக. பிறகுங் கூட அடுத்து வரும் ஆண்டில் ஏற்படும் லாபத்திலுங் கூட ஒரு காலணாவும் தொழிலாளிக்குக் கொடுக்க உடன்படுவதில்லை.

நியாயப்படி 5 ஆண்டுகளுக்குப் பிறகு, தான் முதல்வைத்த 30, 000 ஐ முதலாளி எடுத்தான பிறகு, தொழிலாளியின் உழைப்பால் அந்த நூலாலை நிறுவப்பட்டது என்பதுதான் அதன் பொருள். எப்படி எனில் முதலாளி முதலில் 30, 000 போட்டு ஆலை நிறுவ, அதற்கு ஆண்டு தோறும் ரூ. 6000 வீதம் ஐந்து ஆண்டுகட்கு எடுத்துக் கொள்ளுகிறான். 5 ஆண்டுகட்குப் பிறகு அவன் கடன் அடைந்து விடுகிறது. இந்த 5 ஆண்களாக அவன் தன் குடும்ப நிர்வாகத்திற்கு எடுத்துக் கொண்ட பணம் யாவும், தான் போட்ட முதலுக்கு வட்டி என்று (வேண்டுமானால்) விட்டு விடலாம். ஆனால் மேற் கூறிய கணக்குப்படி 5 ஆண்டுகட்குப் பிறகு அந்த ஆலைக்கும் முதலாளிக்கும் தொடர்பு கிடையாது. அதைத் தொழிலாளிக்குப் பொதுவாக்கி விடவேண்டும். தங்கள் கூலி, ஊதியம், போக மீதம் உள்ளதை (லாபத்தை) ஆண்டு தோறும் அவர்கள் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். இது தான் முறை.

ஈங்கு, லாபம் கிடைக்கும் காலத்தில்தானே இங்ஙனம் நீங்கள் கேட்க முடியும். நஷ்டம்

Telegrams: “RAMBROS”

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

ஏற்பட்டால் தொழிலாளர்களாகிய நீங்கள் நஷ்டத்தை ஈடு செய்யப் பணங் கொடுப்பீர்களா என்று முதலாளிகள் கேட்கக் கூடும்.

கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதி தொழில் சேமிப்பு என்பதாக (தொழிலாளிகட்கே தொழிலகம் சொந்தமானது என்னும் நிலை எய்தும் காலத்தில்) வைத்துவிடலாம். அது பொறிகளைப் பழுது பார்க்கவோ கட்டிடம் செப்பம் செய்யவோ அல்லது நஷ்டம் ஏற்பட்டால் ஈடு செய்யவோ உதவலாம்.

ஆனால் இன்றய நிலை என்ன?

"காண்பதெல்லாம் தொழிலாளி
செய்தான்-அவன்
காணத் தகுந்தது
வறுமையாம்-அவன்
பூணத் தகுந்தது
பொறுமையாம்"-

என்பதுதான்; மற்றும்,

"கந்தை விரித்தோம்—இரு;
கையை விரித் தெங்கள்
மெய்யினைப் போர்த்தோம்.
மொந்தையிற் கூழை - பலர்,
மொய்த்துக் குடித்துப்
பசித்துக் கிடந்தோம்.
சந்தையில் மாடாய்-யாம்,
சந்ததம் தங்கிட வீடும்
இல்லாமல்,
சிந்தமெலிந்தோம்-எங்கள்
சேவைக்கெல்லாம் இது
செய்ந் நன்றிதானோ?".

என்று கேட்கும்படியாகவும் உள்ளது.

தொழிலாளியின் நிலைமட்டுமல்ல இப்படி இருப்பது; உழவனும் இந்த நிலையில் தான் உள்ளான்.

ஒரு சிறு நிலச்சுவான்தார் 200 காணி நிலம் உடையவரின் வாழ்க்கையையும் வருமானத்தையும் நோக்குவோம்.

200 காணி நிலத்திற்கு மொத்த வருமானம், சராசரி ஒரு காணிக்கு 2 வண்டி வீதம் சுமார் 400 வண்டி நெல் ஆகின்றது. அவனிடம் 2 காணிக்கு ஒருவர் விகிதம் 100 பண்ணை ஆட்கள் வாரம் செய்கின்றனர். ஒவ்வொருவருக்கும் 2 வண்டி வீதம் 200 வண்டி வாரத்தில் போய்விடும் நிலச்சுவான்தாருக்குக் கிடைப்பது 200 வண்டி நெல். உழவனுக்குக் கிடைத்த 2 வண்டி நெல்லில், தான் எருவுக்கும் தழைக்கும், விதை நெல்லுக்கும், செலவு செய்த பணத்தை ஈடுசெய்ய வேண்டும்.

ஆனால் ஆடாது அசையாது நெல் குவித்த நிலச்சுவான்தார், தான் நில முதலாளியாய் இருக்கும் காரணத்தினால் 200 வண்டி நெல்லையும் எடுத்துக் கொள்ளுகிறார். அவரின் வருமானம், வண்டிக்கு ரூ. 250- வீதம் நோக்கினால் சுமார் 50,000 ஆகிறது. இதில் தீர்வை, அவர் குடும்பச் செலவு ஆடம்பரச் செலவு இன்ன பிற யாவும், எவ்வளவு மிகுதியாய்க் கழித்த போதிலும் ரூ. 20,000 மேற்படாது. எனவே ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 30,000 ரூபாய் மீதி நிற்கும்.

முதல் கூறிய தொழில் முதலாளியின் கணக்குப்படியே, நில முதலாளியின் விஷயத்திலும் சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவருக்கும் அவர் நிலத்திற்கும் சிறிதும் தொடர்பு இல்லாமல் போய் விடலாம்.

எப்படி எனில், ஆண்டு ஒன்றுக்கு 30,000 ஆக 10 ஆண்டுகட்கு 3,00,000 ஆகின்றது. ஒரு காணி சுமார் 1500 வீதம் 200 காணியும் 3,00,000 தான் ஆகிறது. எனவே நில முதலாளியும் 10 ஆண்டுகட்குப் பிறகு உழவர்களின் உழைப்பால், தான் தன் நிலத்தின் மதிப்பை எய்திய பின்னர் அவர்களுக்கே அதைச் சொந்தமாக்குவதுதான் முறை.

இப்போது நடைபெறுவது இதுதானா? இல்லை.

கீர்த்தி கொள் போகப்
பொருட்புவியே-உந்தன்
கீழிருக்கும் கடைக்கால்-எங்கள்
சீர்த்தொழிலாளர் உழைத்த
உழைப்பில்
சிதைந்த நரம்புகள் தோல்.
—பாரதிதாசன்.

என்றும் போகப் பொருட்புவிக்குக் கடைக் காலாய் இருப்பது தொழிலாளர்களின் சிதைந்த நரம்புகள் தோல்தாம். அவர்கள் வாட, வாழ்பவர்கள் முதலாளிகள். உழைப்பவர்கள் தேய உழைக்காதவர்கள் உயர்கி

நஞ்சன் கூடுபல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

ளுர்கள். நாம் முதல் கட்டுரையில் குறிப்பிட்டபடி பணம் ஒரு சார் சென்று குவிகின்றது. அப்படி பிறர்க்குப் குவிக்கின்றவனே தொழிலாளிதான்.

இந்த ஏற்றத் தாழ்வுகள் நீங்கிச் சமம் ஆகவேண்டும். ஏழை முதலாளி என்ப தில்லாமல், பஞ்சையும் பணக்காரனும் இல்லாமல், குடிசையும் மூன்றடுக்கு மாடியும், என்ற வேறுபாடு இல்லாமல் சக்திக் கேற்ற உழைப்பு தேவைக் கேற்ற ஊதியம் பெறப் "புதியதோர் உலகு செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்" என்று கூவுகின்றது பல இடங்களில் உலகம்.

ஆம் உலகம் பன்னெடுங் காலமாகப் பொதுமையை வற்புறுத்தி வலியுறுத்தி வந்துள்ளது. பலன் இல்லை. கற்றோர்க்கும் கல்லார்க்கும் இடையில் ஒரு பிளவு இருப்பது, போலவே; செல்வந்தனுக்கும் ஏழைக்கும் இடையில் ஒரு பயங்கரமான ஆழமான, பிலம் இருந்தது; இப்போதும் இருக்கிறது. கல்வி எல்லார்க்கும் பரவப் பரவ அந்தப் பிளவு மறைந்துகொண்டு வருவது போலவே செல்வம் பொதுவானால், அந்தப் பயங்கரமான பிலமும் மறைந்து இரண்டும்; (ஏழ்மையும் செல்வமும் மறைந்து) சமநிலைப்படும்.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.

—குறள் 527.

காக்கை தனக்குக் கிடைத்ததை மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். செல்வமும் அத்தகைய இயல்பு உடையவர்க்கே உண்டு.

இனிப் புதிய உலகு எப்படி இருக்க வேண்டும் என்பதை அடுத்த கட்டுரையில் ஆய்வோம்.

# * நிலவுக்கு - - - - *

4

(முன் தொடர்ச்சி)        [சந்திப்பு]

என்ன! இளநகையா இப்படி செய்தாள்? ஒரு இலட்சிய மங்கையாக இருக்க ஆசைப்பட்டவளா அவ்வாறு கெஞ்சினாள்? அடக்கம் எங்கே ஒளிந்து கொண்டது? என்றெல்லாம் உனக்கு நினைக்கத் தோன்றும்.

தோழீ! அடக்கத்தின் ஒடுக்கத்தைப் பற்றிக்கூட நான் அவ்வளவு கவலைப் படவில்லை.

என் கண்களில் கண்ணீர் வந்து விட்டதாம். இல்லை. உண்மையைக் கூறுகிறேனே. வந்தது எனக்குக் கூடத்தான் தெரிந்தது. என் உள்ளத்தே நடக்கும் உணர்ச்சியை என்னால் அடக்கமுடியவில்லை.

இந்தச் சமையத்திலேதான் ஒரு கதை கவனம் வருகிறது. சிறு வயதிலே படித்தது.

'அது முகலாய ஆட்சி இந்தியாவிலே ஓங்கி யிருந்த காலம். பேரரசர் அக்பரின் ஆட்சி பரவியிருந்த காலம். இனத்தைப் பாராமல் எல்லோருக்கும் 'இன்ப வாழ்வு' அளிக்க முயற்சித்தவர் அக்பர்.

கலையிலே ஆர்வமுடையவர் அக்பர். அவர் ஒரு நாள் டான் சன் (**Tan sen**) என்ற கவியின் பாட்டைக் கேட்க நேர்ந்தது. மகிழ்ச்சி கொண்டார்—பாட்டின் கருத்தைக் கருதி—இனிய குரலைக் கேட்டு.

டான் சன்! உன்னைப்போல வெகு அழகாகப் பாடுபவர்கள் வேறு யாராவது இந்த உலகத்தில் இருக்கிறார்களா?

இருக்கிறார்கள் அரசே!

யார் அது?

பிருந்தா வனத்திலிருக்கும் ஹரிதாஸ் சுவாமி

அவர் யார்?

என்னுடைய ஆசான். நான் உம்மை மகிழ்விக்கப் பாடினேன். அவர் பாட்டெல்லாம் கடவுளை (அல்லா) மகிழ்விக்கும் படியாக அமைந்திருக்கும்.

பிறகு இருவரும் சென்றனர். (**Jamna**) யமுனை நதிக் கரையிலே ஒரு சிறு குடிசை. அதில் தான் வசித்து வந்தார் அந்த ஹரிதாஸ் என்ற இசை வல்லுநர். சென்ற இருவருக்கும் அமரைப் பாடு என்று சொல்வதற்கு மனம் வாய் வரவில்லை. அவ்வளவு பெரியவரை எப்படி அதிகாரம் செய்வது? எப்படி தங்கள் எண்ணப்படி நடக்கச் செய்வது? எல்லோரும் பேசாமலிருந்தனர். சிறிது நேரம் கழிந்தது.

டான்சனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. திடீரென்று ஒரு பாட்டைப்பாட ஆரம்பித்தான். கருத்துக் குறைவுபட்டும், இனிமை கெட்டும் அமைந்திருந்தது அந்தப் பாட்டு. வேண்டுமென்றேதான் அதைப் பாடினான்.

நீர் பாடும் முறை தவறு டான் சன்! இப்படிபாடவேண்டும் என்று அந் பாட்டை வெகு அழகாகப் பாடினார் அக் குரு.

அந்த இன்னிசையின் ஒலி அக் காட்டத்தே மரங்களினூடே ஒலித்துக் கொண்டிருந்தது. அக்பரும் தாம் வந்த நோக்கம் நிறைவேறியது குறித்து இன்பம் அடைந்தார்.

நிலவு! இதை எதற்காகக் கூறுகின்றேன் தெரியுமா? சிலர் இந் நிகழ்ச்சியைச் சொல்லுவார்கள். சொல்லிவிட்டு— "பாருங்கள் ஆண்கள் எவ்வளவு இளகிய மனமுடையவர்கள், வெள்ளை மனமுடையவர்கள், பெண்கள் அப்படியல்ல நெஞ்சழுத்தக்காரர்கள்." என்று பிரசாரம் செய்வர்.

பெண்களும் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் தாம். அவர்களுக்கும் உணர்ச்சி, தளர்ச்சி, முயற்சிபோன்ற குணங்கள் அமைந்திருக்கின்றன.

ஒரு பெண்ணை அன்றி ஒரு ஆணை கெட்ட நடவடிக்கைகளில் காலங்கழித்தால் அதற்குக் காரணம் அவர்களின் சூழ்நிலை என்றுதான் கூறமுடியும். இதையறியாதவர்கள் தாம் மேற்கூறியவாறு பிதற்றுவார்கள்.

இள நகை! உன்னைப்பார்ப்பதற்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது அதற்கு நான் என்ன செய்யட்டும்? இதெல்லாம் நீயே வைத்துக் கொண்டவினைதானே! அண்ணை கோபப்பட்டால் அதை மாற்றுவது மிகவும் கடினம். வேண்டுமானால் நீயே கூப்பிட்டுப்பார்.'

ஒரு பெண் மற்றொருத்திக்கு கூறும் ஆறுதல் மொழியினைக் கேட்டனையா? எந்தப் பொறுப்பினையும் தானே ஏற்று நடத்த எவரும் முன்வருவதில்லை—இருக்கும் பொறுப்பினையும் உதறித் தள்ளி விடத்தான் விரும்புகிறார்கள். இம்மாதிரியே நாட்டின் போக்கு வளர்ந்தால் அது முன்னேறுவதற்கான வழிகாணுவது கடினம்.

எனக்கு என்னவென்றே புரியவில்லையே. அப்பொழுதும் தேன்மொழி சிரித்துக் கொண்டுதான் இருந்தாள். தற்போது அது அவள் இயல்பாகிவிட்டது போலும் என்று எண்ணிக் கொண்டேன்.

சிரிப்பு முகத்தை நான் விரும்புபவள். அந்தச் சிரிப்பு, பிறருக்குத் துன்பத்தைத் தருவதாயின் அந்தத் தன்மையை நான் வெறுப்பவள்.

அன்றைக்கெல்லாம் — திடுக்கிடும் நிகழ்ச்சிகளெல்லாம் நடந்து கொண்டிருந்தன. திடீரென்று ஒருவர் உள்ளே வருவது போன்ற அரவம் கேட்டது. தேன்மொழியைப் பார்த்திருந்தவள் திரும்பிப் பார்த்தேன். வீசியிலிருந்து வேனில் உள்ளே வந்து கொண்டிருந்தார்.

"ஏன் அழுகின்றாய் இளநகை; உனக்கு உடம்பு நலமில்லையா"? என்று பரிவுடன் கேட்டுக் கொண்டுதான் உள் நுழைந்தார் வேனில்.

அப்பா! இவ்வளவு பரிவுடன் பேசுபவரா கோபித்துக் கொண்டிருப்பார். என்னால் நம்பமுடியவில்லை. இருந்தாலும் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று எண்ணம் தூண்டியது. வாய் பேசுவதற்கு மறுத்து விட்டது.

"இல்லை அண்ணா இளநகைக்கு உன்னுடன் பேசுவதற்குப் பிடித்தம் இல்லையாம். அவள் தாத்தாவின் வற்புத்தல் தானும். இப்பொழுதுகூட என்னிடம்.............." என்றெல்லாம் தேன்மொழி கூறினாள். இன்னும் அதிகமாகக் கூறிக் கொண்டுதான் சென்றிருப்பாள். ஆனால் அதற்குத்தான் தடை நேர்ந்தது.

இவ்வாறு சிலர் காலத்தையும் நிலையையும் பயன் படுத்திக் கொள்வதால், உண்மையாளர்கள் கூடக் குற்றவாளி யாக்கப் படுகின்றனர்.

"பொய் இவ்வளவும் பொய்" என்று கூவினேன். எப்படித்தான் பேசினேனோ தெரியாது. என் நிலை அடிபட்ட வேங்கை யாயிற்று.

அந்த இரண்டு வார்த்தைகளை மட்டும் நான் கூறினேன். அதற்கு மேல் அந்தச் சமயத்தில்........எனக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. தலை குனிந்து கொண்டேன்.

கை கொட்டினாள், வாய் விட்டுச் சிரித்தாள் தேன்மொழி.

அப்போதுதான் என் நிலை ஹரிதாஸ் கோவிந்த குருவின் நிலை போல் ஆகிவிட்டது என்பதை அறிந்து கொண்டேன்.

"நீ தான் இளநகையைக் கூடக் கண்ணீர் விடச் செய்தாயா? தேன்மொழி" என்று தொடர்ந்து வேனிலின் குரல் ஒலித்தது. அவர் குரலிலே கோபம் கூத்தாடியது.

வருங்கால மனைவிபீடத்தில் இவ்வளவு வாஞ்சையா? நானா அவளைக் கண்ணீர் விடச் செய்தேன்? ஏன்? இளநகை! நானா உன்னைக் கண்ணீர் விடு "என்று கட்டளை இட்டேன் "என்று கூறிக் கொண்டே என் அருகில் வந்து என் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

இதற்கு நான் என்ன பதில் கூறுவது.

(வரும்)

---

# கச்சியப்பர் கவித்திறன்

சி. து. க.

(முன் தொடர்ச்சி)

ஆனால் உள்ளத்தின் வழி நிகழும் அருளுணர்வினால் ஓம்பப் பெறும் காதலின்பத்துக்குப் பொருந்தாது. தலைவன் தலைவியரிடையில் உண்மைக் காதல், வளரும் இயல்பினதேயன்றிக் குறைதல் எஞ்ஞான்றும் இல்லை. இதனை,

ஆயுந் தொறுந் தொறும் இன்பம்
தருங்கலை யாங்கறிவு
மாயுந் தொறுந் தொறும் இன்பம்
தரும்வள்ளல் வார்கழல்கள்
தேயுந் தொறுந் தொறும் இன்பம்
தரும் சந்து, தேங்குழல் நிற்
றோயுந் தொறுந் தொறும்
நேராத இன்பம் சுரந்திடுமே.

என்ற திருச்செய்யுள் விளக்குகின்றது.

கோவை இலக்கியத்திற்கேற்ப இங்கும் பாங்கற் கூட்டம் நிகழ்கின்றது. ஆசிரியர் புராண மரபையொட்டித் தலைவன் முன்னோன் ஆகிய 'விநாயகப் பெருமானை'யே பாங்கனுக்குக் காட்டுகின்றார். தலைவன், பாங்கனைத் தலைவி இயல்புகள் கூறி அவள் பாற் செல்ல விடுக்கும்போது,

நின்னடி போற்றி எவரும்
நினைத்த கரும மெலாந்
தன்னமுன் தாழ்வின்றி முற்றுவரேல்
தமியேன் பொருட்டு
முன்னவ நீயே முயலின் முகிழ்த்த
முலைப்பணைத்தோள்
அன்னவள் கூட்டம் அமையாமை
யாவரின் ஆவதுவே

என்று கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலனாகும். செயல்களில் இடையூறு நேராதிருக்க மக்கள் 'விநாயக வணக்கம்' செய்கிறார்கள். அவ் விநாயகனே துணை செய்யவரின் தலைவியின் கூட்டம் பெறுதற்குத் தடையென்னை? இதுவே தலைவன் கருத்தாகும்.

இப் படலத்துள் சிற்சில இடங்களில் நகைச்சுவையோடு கலந்த சிலேடை நயங்கள் தோன்றுகின்றன. தலைவன், தலைவி தோழியோடிருந்த செவ்வி நோக்கி அவண் வந்து அவர்களுடன் பேச்சுத் தொடுக்கிறான். வழியும் பெயரும் வேழமும் மானும் வினவுகின்றான். அவர்கள் எதும் எதிர்மொழி புகலவில்லை. வாளா விருந்தனர். தலைவன் ஈற்றில் உலகில் விருந்தினரை நடத்தும் பெருமையெல்லாம் கூறித் தன்னை அவர்கள் வரவேற்காத தவறினையெடுத்துக் காட்டுகின்றான்.

மருந்தினை வான நிதியினை
வேட்பினு மாட்டுளதேல்
விருந்தினர் மாட்டின்மை
மேவச் செய் யார்விரி நீருலகோர்
பொருந்திய பல்ல கடா வுய்த்து
வேண்டினும் பூங்கொடியே
திருந்திய வோர் விடை யேனும்
கொடாத திறமெவனே

என்ற செய்யுளில் பலகேள்வி கேட்பினும் ஒரு பதிலும் சொல்லாததன் காரணம் என்னை? என்ற பொருளோடு, பலகடாக்களைக் கொடுத்து வேண்டிக் கொண்டபின்னும் ஒரு விடை (காளை) கூடத்தராதது என் கருதி என்னும் சிலேடை நயமும் தோன்றுகின்றது.

மற்றோரிடத்தில், தலைவன், கிழியில் தலைவியின் உருவெழுதி மடலூர எண்ணியதைத் தோழிபாற் கூறினன். தலைவியின் அழகுருவத்தை எழுதல் யார்க்கும் அரிதாகும் என்று தோழி குறிப்பிட்டாள். 'உருவெழுதுதலோடு மட்டுமின்றி உயிரும் உண்டாக்க வல்லேன்' என்று தலைவன் கூறவே, அங்ஙனமாயின் தாங்களே தலைவி போல ஒரு மாதினைப் படைத்துக் கைக்கொள்வதற் கென்ன தடை?' என்று தோழி கூறினாள். தலைவன், அதனை மறுத்துப் பிரமன் தான் படைத்த மேனகையை மகள் என்றும் பாராமல் காமுற்ற இழி செயல் தன் குலத்திற் கேலாதது என்று கூறினான். இதனைக் கூறுங்கால்

'முட்டாட்கமல முதல்வனைப் போலெம்மை முன்னினை கொல்?' என்று முள்—தாள்—கமல முதல்வனை நம் கண் முன் முட்டாள் (அறிவிலி) என்ற சொற்களாற் கொணர்ந்து காட்டுகின்றார்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குத்தெரு சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)